கனக்ஷன் எடுத்துக் கொள்ளச் சொல்கிறார்கள். இப்படி அதிகாரிகள் சொல்வதற்குக் காரணம், ஹவுஸ் கனக்ஷன் எடுப்பதால் முனிசிபாலிட்டிக்கு பணம் வருகிறது. ஆவே, முதலிலே மக்கள் முன்வரவில்லை. பின்னர் அதிகாரிகள் பேசி, 1981—82-ல் 1,000 ஹவுஸ் கனக்ஷன் பெறும் வாய்ப்பு எற்பட்டிருக்கிறது. இப்போது அந்த எண்ணம் ரொம்ப முன்னேறி வேலை நடந்து கொண்டிருக்கிறது.

நேர்த்தியாயிருப்பு கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண். 111—திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்கு குடி தண்ணீர் கொண்டு செல்லும் வழியிலுள்ள நேர்த்தியாயிருப்பு கிராமத்திற்கும் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும் என்று கிராம மக்களிடமிருந்து கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி கிராமத்திற்கு தண்ணீர் வழங்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) நேர்த்தியாயிருப்பு கிராமத்தில் ஒரு திறந்த கிணறும் ஒரு ஆழ்துளை கிணறும் உள்ளன. இதில் கிடைக்கும் நீர் குடிப்பதற்கு ஏற்றதாக உள்ளது. எனவே ஊரகக் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் அளிக்க இயலாது. இருப்பினும் அருப்புக்கோட்டை குடிநீர் திட்டத்தின் கீழ் இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்த ஊரிலே ஒரு திறந்த கிணறும் ஆழ் குழாய் கிணறும் இருக்கின்றது என்று சொன்னார்கள். அந்த நேர்த்தியாயிருப்பு கிராமம் உள்வாய்த்துறை பஞ்சாயத்தைச் சேர்ந்தது. அந்தப் பஞ்சாயத்தின் பொது நிதியிலிருந்து பணம் செலுத்தப்பட்டு அதன் மற்ற பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் கிடைக்கின்றபோது இந்தப் பகுதிக்கு மட்டும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்த கிராமத்திற்கும் இதனை விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, குடிநீர் கொடுப்பதற்காக கிராமங்களை 6 வகையாகப் பிரித்திருக்கிறோம். இந்தக் கிராமம் 6-வது வகையிலே வருகின்றது அதாவது நல்ல தண்ணீர் வருஷம் பூராவுக்கும் அங்கே கிடைக்கின்றது. அதனால் தான் அந்த ஊருக்கு கொடுக்காமல் மற்ற ஊர்களுக்குக் கொடுக்கிறோம். அந்த

ஊரிலே 300 பேர்கள்தான் இருக்கிறார்கள். இருப்பினும் மேற்கண்ட கிராமத்திற்கு அருப்புக்கோட்டை குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. ஆனால் அதற்கு அருப்புக்கோட்டை நகராட்சி ஒப்புதல் தர மறுக்கின்றது. இப்படிப்பட்ட சிக்கல் அதிலே இருக்கின்றது. மேலும் அந்தக் கிராமம் தண்ணீர் இல்லாத கிராமம் அல்ல, ஆழ் குழாய கிணறு இருக்கின்றது. போதுமான தண்ணீர் இருக்கின்றது. பெரனியல் சப்ளை இருக்கின்றது.

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிகமாக அந்த ஊரிலே தண்ணீர் இருப்பதாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது எப்படி என்பது தெரியவில்லை. கோடை காலங்களில் அந்தக் கிணறுகளிலே தண்ணீர் கிடைக்கவில்லை. உள்வாய்த் துறையிலேயும் கிணறுகள் இருக்கின்றன. ஆகவே ஒரே பஞ்சாயத்தைச் சேர்ந்த 4 வார்டுகளுக்கு தண்ணீர் கொடுக்கப்படுகின்ற போது ஒரு வார்டுக்கு மட்டும் தண்ணீர் கொடுப்பதற்கில்லை என்று சொன்னால் அது பாரபட்சமாகக் கருதப்பட மாட்டாதா? ஆகவே அங்கே இருக்கின்ற மக்களின் மனநிலையையும் தேவையையும் அடிப்படையாகக் கருதி இதைச் செயல்படுத்த வேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே பல்வேறு மேல்நிலைத் தொட்டிகள் இருக்கின்றன; ஆனால் அவை கட்டப்பட்டு திறக்கப்படாமல் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்தால் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும்

மாண்புமிகு பேரவை தலைவர் : கேள்வியை சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நிரம்ப சாப்பாட்டுக்கு வசதி உள்ளவர்களுக்கு சோறு போடுவதில்லை. சாப்பாட்டுக்கு வசதி இல்லாதவர்களுக்குத்தான் சோறு போடுகிறோம். அப்படியானால் அது பாரபட்சம் காட்டுவதாக ஆகாது. அதுபோன்று ஆண்டு பூராவுக்கும் தண்ணீர் அந்தப் பகுதியிலே இருக்கின்றது என்று நான் சொல்கிறேன். ஆகவே போதுமான தண்ணீர் இருப்பது உண்மை. ஆனால் ஆண்டு பூராவுக்கும் இல்லை என்று உறுப்பினர் சொல்கிறார். அப்படியானால் அது கேட்டகரி மூன்றிலே வரும். அப்படியானால் தண்ணீர் திட்டம் வருமேயானால் அந்தத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகின்ற காரணத்தால் கோடையில் தண்ணீர் இல்லை என்று சொல்வதன் காரணத்தால் அந்த ஊர் கேட்டகரி 3-லே வருமா என்று பரிசோதனை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.